**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.699/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 13.10.2025.**

| | |
|---|---|
| **Name : சதீஷ்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தலைஆரியூரில் குடியிருந்து நெசவு வேலை செய்கிறேன். கடந்த 2022ம் வருடம் இரவு 8.00 மணி சுமாருக்கு நான் வீட்டிற்கு செல்லும் போது அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் என்னை தள்ளிவிட்டதில் எனக்கு காயம் ஏற்பட்டது. இதனால் நான் மருத்துவமனைக்கு சென்றேன். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை எதிரிகளின் மீது இருந்த சந்தேகத்தின் பேரில் சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 08.11.2022 ம் தேதி இரவு 8 மணிக்கு கோபி வீட்டிலிருந்து விசைத்தறி வேலை முடித்துவிட்டு இரு சக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் இல்லை. அப்போது பெரியாண்டிச்சி அம்மன் கோவில் அருகே சென்ற போது மூன்று நபர்கள் என் இரு சக்கர வாகனத்தை நிறுத்தினார்கள் என்றால் இல்லை. பிறகு இது பற்றி கேட்ட போது எதற்காக கோபி வீட்டில் வேலை செய்கிறீர்கள் என்று சொல்லி என் கைகளை சூரியபிரகாஷ் மற்றும் கோபி ஆகியோர் பிடித்துக் கொண்டனர் என்றால் இல்லை. கவிநாத் என்பவர் என்னை கெட்ட வார்த்தையால் பேசினார் என்றால் இல்லை. பிறகு கையால் என் முகத்தில் ஓங்கி குத்தினார் என்றால் இல்லை. பிறகு கீழே இருந்த கட்டையை எடுத்து தோள் பட்டையில் அடித்தார் என்றால் இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. நானும், எதிரியும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.699/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 13.10.2025.**

| | |
|---|---|
| **Name : ரவீந்தர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தலைஆரியூரில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். கடந்த 2022ம் வருடம் இரவு 8.00 மணி சுமாருக்கு நான் வீட்டிற்கு செல்லும் போது அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் அ.சா.1யை தள்ளிவிட்டதாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 08.11.2022ம் தேதி இரவு 8 மணிக்கு அ.சா.1 கோபி வீட்டிலிருந்து விசைத்தறி வேலை முடித்துவிட்டு இரு சக்கர வாகனத்தில் சென்றார் என்றால் இல்லை. அப்போது பெரியாண்டிச்சி அம்மன் கோவில் அருகே சென்ற போது மூன்று நபர்கள் அ.சா.1 இரு சக்கர வாகனத்தை நிறுத்தினார்கள் என்றால் இல்லை. பிறகு இது பற்றி கேட்ட போது எதற்காக கோபி வீட்டில் வேலை செய்கிறீர்கள் என்று சொல்லி அ.சா.1யை கைகளால் சூரியபிரகாஷ் மற்றும்

கோபி ஆகியோர் பிடித்துக் கொண்டனர் என்றால் இல்லை. கவிநாத் என்பவர் அ.சா.1யை கெட்ட வார்த்தையால் பேசினார் என்றால் இல்லை. பிறகு கையால் அ.சா.1ன் முகத்தில் ஓங்கி குத்தினார் என்றால் இல்லை. பிறகு கீழே இருந்த கட்டையை எடுத்து அ.சா.1ன் தோள் பட்டையில் அடித்தார் என்றால் இல்லை. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.